ஈயத்தால் போதையடைதல்
அல்லது ஈயத்தால் உடல்நலம்
பாதிப்படைதல்

# எச்சரிக்கை

1948க்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடங்களில் இருக்கும் பெயின்ட்டில் ஈயம் இருக்கக் கூடும். இது உரிந்து வரத் தொடங்கும்போது உங்கள் சிறு குழந்தைகளின் உடல்நலம் பாதிக்கப்படலாம். அதைக் கண்டறிவதற்குக் குறிப்பிட்ட அறிகுறி எதுவும் இல்லை.

உங்கள் மருத்துவரிடம் அது குறித்துப் பேசுங்கள்.



பொது உடல்நல நெறிமுறை, ஈயத்தால் ஏற்படும் உடல்நல பாதிப்பைக் கையாள்வதற்கான நெருக்கடி நிலை நடவடிக்கைகளை விளக்குகிறது.

இங்கிருந்து தகவல் பெறுங்கள்:
சுகாதார மற்றும் சமூக நடவடிக்கைத் துறை வாரியம்
(Departmental Board of Health and Social Action)
(சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரப் பிரிவு
(Environment and Health Division))

உங்கள் குழந்தையைப் பரிசோதனை செய்ய தொடர்புகொள்ளுங்கள்:
- உங்களுக்கு ஆலோசனை அளிக்கும் மருத்துவர்
- உங்கள் MCW மையம் அல்லது உங்கள் பள்ளி மருத்துவர்
- உங்கள் சமூகப் பணியாளர்

உங்கள் தொடர்பு விவரம்:

Ce document est rédigé en langue Tamoul

# நீங்கள் பழைய கட்டிடம் ஒன்றில் வசிக்கிறீர்களா?

(1948க்கு முன் கட்டப்பட்டதா?)



## உங்களுக்குச் சிறு குழந்தைகள் இருக்கிறார்களா?

## எச்சரிக்கையாக இருங்கள்

# சுட்டிக்காட்டுங்கள்



உங்கள் வீட்டிலோ மாடிப் படிகளிலோ எங்காவது பெயின்ட் உரிந்து வருகிறதா?



பெயின்ட்டிலிருந்து வரும் தூசிடம் எச்சரிக்கையுடன் இருங்கள்!



# தடுத்துவிடுங்கள்



பெயின்ட் உரிந்து வரும் இடத்தை மூடுங்கள்.

நீங்கள் பணி செய்துகொண்டிருக்கிறீர்கள் எனில், தூசு, பெயின்ட் துகள்கள் ஆகியவற்றிடம் எச்சரிக்கையுடன் இருங்கள். ஏனென்றால் அவை ஆபத்தானவையாக இருக்கக் கூடும். குழந்தைகளை அந்தப் பக்கம் வர அனுமதிக்காதீர்கள். தரையை நீரால் சுத்தம் செய்யுங்கள்.





தரையை ஓர் ஈரத் துணியால் சுத்தம் செய்யுங்கள். ஈரத்தை அகற்ற உங்கள் வீட்டை அடிக்கடி காற்றோட்டமாக்குங்கள்.

# செயல்படுங்கள்



குழந்தைகளின் கைகளை அடிக்கடி - குறிப்பாக சாப்பிடுவதற்கு முன் - கழுவுங்கள். அவர்களது நகங்களை நீக்குங்கள்.

உங்கள் குழந்தைகளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு முறை வீட்டிற்கு வெளியே அழைத்துச் செல்லுங்கள்.






அவர்களுக்கு இரும்புச் சத்து அதிகமுள்ள உணவுகளைக் கொடுங்கள். உங்கள் மருத்துவரின் ஆ லோசனையைப் பின்பற்றுங்கள்.